குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.
முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை
STC. No.1006/2023

(கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படியான விசாரணை)

எதிரி – தாமின் அன்சாரி

| | | | |
|---|---|---|---|
| 1) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி அவருடைய சாட்சியத்தில், வாதியும், அ.சா.1 முனியசாமியும் நிர்வகிக்கும் தொழிற்சாலையில், எதிரியாகிய நீர் வாதியின் தீப்பட்டி தொழிற்சாலையில் 18.02.2023 ம் தேதியில் ரூ.2,67,155/–ற்க்கும் மற்றும் 23.03.2023 ம் தேதியில் ரூ.3,52,167/– ற்க்கும் (மொத்தம் ரூ.6,19,332/), தீப்பட்டி வாங்கியதாவும், அதில் ரூ.2,17,155/– த்தை பல தவணைகளில் பணமாகவும், வங்கி மூலமாகவும் செலுத்தி, பாக்கி தொகை ரூ.4,02,167/– செலுத்த வேண்டும் என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளர் நான் கிடையாது, அதன் உரிமையாளர் முகமது ரிபாக் என்பவர் ஆவார். நான் அந்த நிறுவனத்தில் மார்க்கெட்டிங் செய்து வந்தேன். வாதி நிறுவனத்தில் இருந்து கடனுக்காக தீப்பெட்டி வாங்கும்போது எங்களுடைய நிறுவனத்தில் இருந்து பிணையத்திற்காக காசோலை கொடுப்பது வழக்கமாகும். நாங்கள் பணத்தை கொடுத்த பிறகு காசோலையை திருப்பி கொடுத்துவிடுவார்கள். ஆனால், எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுக்க வேண்டிய பணம் முழுவதையும் கொடுத்து முடித்த பிறகும் பிணையமாக கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். |
| 2) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி அவருடைய சாட்சியத்தில், வாதி பல முறை மேற்படி பணத்தை கேட்டதற்கு காலம் தாழ்த்தியதாகவும், எதிரியாகிய நீர் வாதியின் மகன் முனியசாமி மீது மதுரை, கூடல் புதூர் காவல் நிலையத்தில் பொய் புகார் ஒன்று கொடுத்ததாகவும், விசாரணையில் தாங்கள் கொடுக்க வேண்டிய பணம் ரூ.4,02,167/– 05.08.2023 ம் தேதிக்குள் செலுத்தி விடுவதாக கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | 2023 ஆம் ஆண்டு வாதியின் வகையாட்கள் காலை 5 மணிக்கு என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். ஆகையால் நான் 100 அவசர அழைப்பிற்கு ஃபோன் செய்தேன். போலீசார் என்னுடைய வீட்டிற்கு வந்து அனைவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் புகார் கொடுத்ததாக கூறுவது பொய்யாகும். |
| 3) | கேள்வி | | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி, அவருடைய சாட்சியத்தில், வாதியின் மகன் முனியசாமி 10.08.2023 ம் தேதி, எதிரியாகிய உங்களின் இடத்திற்கு வந்து மேற்படி பாக்கி தொகையை கேட்டதற்கு, தாங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | 31.08.2023ம் தேதியிட்ட ரூ.3,52,167/-ற்கான தங்களுடைய கரூர் வைசியா வங்கி, கொசகுளம் கிளை காசோலையை (காசோலை எண்.000212) கொடுத்து, பாக்கி ரூ.50,000/-த்தை 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் தருவதாக கூறியதாவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? (காசோலையை காண்பித்து கேட்கப்பட்டது) |
| | பதில் | : | இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடைய வங்கி கணக்கிலிருந்து கொடுக்கப்பட்ட காசோலை இல்லை. அது RRR மார்க்கெட்டிங் நிறுவனத்தின் உரிமையாளரான முகமது ரிபாக் என்பவரின் கையொப்பம் செய்து கொடுக்கப்பட்ட காசோலை ஆகும். ஆகையால், இந்த வழக்கை என் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள். |
| 4) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய காசோலையை வாதி அவர் கணக்கு வைத்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் வசூலுக்காக 31.08.2023ம் செலுத்திய போது, 01.09.2023 ம் தேதி வங்கி கணக்கில் Payment Stopped by the drawer என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | அந்த காசோலை என்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து கொடுக்கப்பட்டது அல்ல என்பதாலும், அதை நான் கொடுக்கவில்லை என்பதாலும், அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என்பதாலும் காசோலை வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்ட விபரமும், அது திருப்பப்பட்ட விபரமும் எனக்கு தெரியாது. |
| 5) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், 09.09.2023ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை வாங்க மறுத்து திருப்பி அனுப்பியதாகவும் என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | இந்த வழக்கில் திருப்பப்பட்டுள்ள அஞ்சலக உரையில் உள்ளது என்னுடைய பெயர் தான், ஆனால் அதில் உள்ளது RRR நிறுவனத்தின் முகவரி ஆகும், அந்த நிறுவனம் போல் பல நிறுவனங்களுக்கு நான் பொருட்களை மொத்தமாக விற்பனை செய்வதற்கு மார்க்கெட்டிங் செய்து வருகிறேன். |
| 6) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், மேற்படி காசோலை திருப்பப்பட்ட விவரம் தெரிந்தும் இதுநாள் வரை பணம் எதுவும் தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | அறிவிப்பு அனுப்பப்பட்ட விபரமே எனக்கு தெரியாது, நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அறிவிப்பை அதில் உள்ள செல்போன் என்னை வைத்து தபால் நிலையத்திலிருந்து அழைத்த போது தான் அந்த அறிவிப்பை நான் வாங்கினேன். அதற்கு முன்பு இந்த வழக்கு தொடர்பான அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. |
| 7) | கேள்வி | : | வா.சா.1 – வாதியின் மகனும், அதிகார முகவருமான முனியசாமி மேலும் |

| | | | |
|---|---|---|---|
| | | | அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய வங்கி கணக்கில் பணம் இல்லாதது தெரிந்தும், மேற்படி காசோலையை கொடுத்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டதாகவும் கூறி, நீங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான குற்றச்செயலை செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு. வழக்கு காசோலை என்னுடைய காசோலை இல்லை என்பதால் இந்த வழக்கிற்கும் எனக்கும் எவ்விதமான தொடர்பும் கிடையாது. |
| 8) | கேள்வி | : | இவ்வழக்கு குறித்து நீர் வேறு ஏதேனும் கூற வேண்டுமா? |
| | பதில் | : | பொய் வழக்கு. |
| 9) | கேள்வி | : | உமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | உண்டு |

மேற்படி கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில்கள் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.